

விளையாட்டு

■ கீதா

வாட்டி வதைக்கும் வறுமையிலும் தேசிய அளவில் விளையாடி வெற்றிகளைக் குவித்து படித்த பள்ளிக்கும், பிறந்த ஊருக்கும் பெருமை சேர்க்கிறார்கள் இந்த மாணவர்கள்

# சிகரம் தொடத் துடிக்கும் சின்னஞ்சிறு சிறகுகள்

ஏழாம் வகுப்பு படிக்கிறார் எம். மஞ்சு. தமிழக அரசுக்குச் சொந்தமான சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் இயங்கி வரும் 'ஸ்போர்ட்ஸ் அண்டு ஜம்ப் அகாடமி'யில் பயிற்சி பெறுவதற்காக கடந்த வாரம் தேர்வு செய்யப்பட்டார். இந்தத் தகவலை மயானத் தொழிலாளியான மஞ்சுவின் தந்தையிடம்போய் சொன்னார்கள். மகள் ஏதோ விளையாடுவதற்காக பட்டணம் போகிறாள் என்று அவருக்குப் புரிந்ததே தவிர, அதன் பெருமிதம் அவருக்கு விளங்கவில்லை. 'இன்று வெயில் கொஞ்சம் அதிகம்' என்பதுபோல இந்தத் தகவலைக் கேட்டு தலையாட்டிவிட்டு, முந்தின தினம் அந்தக் கிராமத்தில் இறந்த ஒருவரின் உடலை எரிப்பதில் அவர் மும்முரமானார்.

சித்தாள் வேலை செய்பவரின் 10வது படிக்கும் மகள் சுந்தரி. கடந்த ஆண்டு தமிழக கோ கோ அணியில் இடம்பெற்றார். இந்த அணி மாநிலங்களுக்கிடையில் நடந்த போட்டியில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. சுந்தரியின் அபாரமான விளையாட்டைப் பார்த்து அவரை 'இந்தியன் கேம்ப்'பில் தேர்வு செய்துள்ளனர். இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த சென்னை மாரத்தான் (தொடர் ஓட்டம்) போட்டியில் ஏழாம் வகுப்பு மாணவி சுப்புலட்சுமி ஒன்பதாவதாக வந்து 3 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு பெற்றார். கடந்த ஆண்டு நடந்த சென்னை மாரத்தானில் இவர் 6வது இடம் பிடித்தார். இவரின் தந்தை சலவைத் தொழிலாளி. கடந்த ஆண்டு வேணி என்ற மாணவி 10 கி.மீ. தொடர் ஓட்டத்தில் 10வது இடம் பிடித்தார்.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த மாநில அளவிலான 100 மீ. நீச்சல் போட்டியில் 9வது படிக்கும் மீனா 3வது இடம் பிடித்தார். தற்போது தமிழக அரசு இவரை சிறப்பு வீராங்கனையாகத் தேர்வு செய்து, வேளச்சேரியில் உள்ள 'ஸ்விம்மிங் அண்டு டைவிங் அகாடமி'யில் பயிற்சி பெறுகிறார் (இவருக்குத் தந்தை இல்லை. தாய் மட்டுமே. விடிகாலையிலேயே எழுந்து, கூடையில் காய்கறி எடுத்துச் சென்று விற்பனை செய்துவிட்டு, அதன் பிறகு 12 கி.மீ. தூரம் சைக்கிளில் சென்று பயிற்சி முடித்துப் பள்ளிக்குச் செல்கிறார்). இவர் தவிர 7வது படிக்கும் சுதா மற்றும் 10ம் வகுப்பு மாணவி ராமலட்சுமியும் நீச்சல் பயிற்சி பெறுகிறார்கள். மாநில அளவில் குத்துச் சண்டையில் 3வது இடம் வந்த உமாபாரதி, முத்துமாரி உட்பட ஆறு பேர் தமிழக அரசிடமிருந்து மாதம் 600 ரூபாய் உதவித்தொகை பெறுகிறார்கள். ஊட்டியில் இயங்கிவரும் மாநில அரசின் நீண்ட தூர ஓட்ட அகாடமியில் 4 மாணவிகளும், திருவண்ணாமலை இடைதூர ஓட்ட அகாடமியில் இருவரும், சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் ஸ்பிரிண்ட் அண்டு ஜம்ப் அகாடமியில் ராமலட்சுமி என்ற மாணவியும் பயிற்சி பெறுகிறார்கள்.

இந்தத் தகவல்கள் எல்லாம் எதற்கு? இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது என்கிறீர்களா? இருக்கிறது. இவர்கள் அனைவரும் ஒரே கிராமத்தை, அதிலும் குறிப்பாக ஒரே பள்ளியைச் சேர்ந்தவர்கள். தமிழகத்தின் கடைக் கோடியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

நாராயணம்மாள்புரம். திருநெல்வேலியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமம். 500 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில், வேலி கருவேல முட்புதர்களுக்கு நடுவில் ஊரில் பல வீடுகள் குடிசைகளாகவே உள்ளன. தெருவில் திறந்தவெளி சாக்கடை ஓடிக் கொண்டிருக்கிறது. இங்கு வசிக்கும் பெரும்பாலானவர்கள் கூலித் தொழிலாளர்கள். துணி துவைப்பது, சித்தாள் வேலை, ஆற்றில் மீன் பிடிப்பது என்று தினப்படி கிடைக்கும் 50, 100 ரூபாயை அடிப்படையாகக் கொண்டு 'அன்றாடங் காய்ச்சுபவர்கள்'.

பெற்றோர்களின் வறுமையான நிலையிலும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் விளையாட்டில் வெற்றிகளைக் குவித்து வருகிறார்கள் இந்த ஊரில் உள்ள பல மாணவிகள். அந்தக் கிராமத்தில் திருஇருதய சகோதரர்கள் சபையின்கீழ் இயங்கி வரும் செயிண்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியில்தான் அனைவரும் படிக்கிறார்கள். நல்ல உணவு இல்லை. பயிற்சி செய்வதற்கு மைதானம் இல்லை. வறுமையைத் தவிர வேறு எதையும் பார்க்காத இவர்களுக்கு இது எப்படி சாத்தியம்? இந்த மாணவிகளின் சாதனைகளுக்குப் பின்னே இருப்பவர் ஒருவர். அவர், பயிற்சியாளர் சுந்தரமூர்த்தி. பூஜ்யத்தில் இருந்து தொடங்கி, பெரிய நம்பிக்கையை உருவாக்க முடிந்த தனது அனுபவத்தை அவர் நம்மிடம் கூறத் தொடங்கினார்.



சுந்தரமூர்த்தி

''என் தந்தை கட்டிடத் தொழிலாளி. அம்மா வீட்டு வேலை செய்கிறார். இந்த நிலையில் கோ கோ என்ற ஒரு விளையாட்டில் மட்டும் நான் தேர்ச்சி பெற்றிருக்கா விட்டால் ஒரு கொத்தனாராகவோ, சித்தாளாகவோதான் மிஞ்சியிருப்பேன். பி.டி. மாஸ்டர் என்ற ஒரு வேலையை எனக்கு வாங்கித் தந்தது விளையாட்டு.



தடைகளைத் தாண்டும் ராமலட்சுமி



மைதானத்தில் பயிற்சி

என்னைப் போலவே என் கிராமத்துக் குழந்தைகளும் முன்னேற வேண்டும். இந்த வறுமையான சூழலிலிருந்து வெளியில் வர வேண்டும். அதற்காக, என்னால் ஆனதை செய்ய வேண்டும் என்று விரும்பினேன். 2006ம் ஆண்டு ஆறு குழந்தைகளைத் தேர்வு செய்து பயிற்சி தந்தேன். முதலில் எந்த விளையாட்டில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு அவர்கள் விருப்பப்படி கோ கோ, குத்துச்சண்டை, நீச்சல், தடகளம் என்று பயிற்சி தந்தேன். உள்ளூர் பள்ளிகளுக்கிடையே நடந்த விளையாட்டுப் போட்டிகளில் முதலில் பங்கு பெற்றார்கள்.

சாப்பிடும் தட்டு, டிராவல் பேக் என்று பரிசுகள் வாங்கி வந்தார்கள். இந்தப் பொருட்கள் எல்லாம் எங்கள் கிராமத்தில் இருப்பவர்களுக்குப் பார்க்கவே அதிசயம். இதைப் பார்த்த மற்ற குழந்தைகளுக்கும் விளையாட்டில் ஆர்வம் வந்துவிட்டது. 20 பேருக்கு மேல் ஆர்வமாக வர ஆரம்பித்தார்கள். ஒழுங்காக பத்தடி தூரம் நடக்கவே முடியாத கிராமத்தில், இவ்வளவு பேருக்கும் பயிற்சி தருவது சிரமம். எனவே 12 கி.மீ. தூரத்தில் இருக்கும் பாளையங்கோட்டைக்கு சைக்கிள், சரக்கு ஏற்றிச் செல்லும் ஆட்டோ போன்றவற்றில் அவர்களை அழைத்துப் போய் அண்ணா ஸ்டேடியத்தில் பயிற்சி கொடுப்பேன்.

அங்குதான், பல தேசிய சாம்பியன்களை உருவாக்கிய பிராங்பால் ஜெயசீலன் என்ற பயிற்சியாளரைப் பார்த்தேன். கிராமத்துக் குழந்தைகள் ஒட்டு மொத்தமாக வருவதைப் பார்த்து, எங்களைப் பற்றி விசாரித்தார். அடுத்த வேளை உணவிற்கே நிச்சயம் இல்லாத சூழலில், விளையாட்டில் இவ்வளவு ஆர்வமா என்று வியந்து குழந்தைகளுக்கு விளையாடத் தேவையான காலணி, டிரஸ் என்று ஏற்பாடு செய்து கொடுத்தார். ஆர்வம் இருந்ததே தவிர, சாம்பியன்களை உருவாக்க முறையாக எப்படி பயிற்சி தர வேண்டும் என்ற முன் அனுபவம் எனக்குக் கிடையாது. பிராங்பால் சார்தான் அதற்கு வழிகாட்டினார். அதேபோல், எங்கள் பள்ளியின் பொறுப்பாளர் லாரன்ஸ், பள்ளியில் இருந்து என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் இன்றுவரை செய்து கொண்டிருக்கிறார்.

அடுத்து, மாவட்ட அளவில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு எடுத்தவுடனேயே வெற்றிகளைக் குவித்தார்கள். இது சொல்வதற்கு எளிதாக இருக்கும். ஆனால், பெரிய பெரிய பள்ளிகளில் இருந்து போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பெற்றோர்கள், பயிற்சியாளர்களுடன் காரில் வந்து இறங்குவார்கள். எங்கள் கிராமத்துக் குழந்தைகள் ஒன்றுமே இல்லாமல் வெறுமனே நிற்கும். ஆனால், போட்டிகளில் பிரமாதப்படுத்துவார்கள்.

போட்டிகளில் கலந்துகொள்ள பல ஊர்களுக்கும் செல்லும்போது, இருப்பதை அடகு வைத்து, அங்கு இங்கு என்று பணத்தைப் புரட்டிக் கொண்டுதான் போக வேண்டியிருக்கிறது. மாவட்டத்தில் நடக்கும் போட்டியில் வெற்றி பெற்ற எங்கள் மாணவிகளைப் பற்றி அடிக்கடி உள்ளூர் செய்தித் தாளில் செய்தி வரும். இதைப் பார்த்து, திருநெல்வேலியில் கிங் கம்யூனிட்டி கேர் டிரஸ்ட், விவேகானந்தா வித்யாஸ்ரமம் மாறன் போன்றவர்கள் பணமாகவோ, பொருளாகவோ உதவி செய்கிறார்கள்.

பல்வேறு விளையாட்டுகளில் தற்போது 35 மாணவிகள் பயிற்சி பெறுகிறார்கள். இன்னும் மூன்று வருடத்தில் பாருங்கள்... மொத்த தேசமும் எங்கள் கிராமத்தை ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்க்கும் அதிசயம் நடக்கப் போகிறது. அப்போது, குறைந்தது 10 தேசிய சாம்பியன்களாவது எங்கள் கிராமத்தில் இருப்பார்கள். அதற்கடுத்த ஆண்டுகளில் சர்வதேசப் போட்டிகளுக்குப் போய்விடுவார்கள்'' என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் சுந்தரமூர்த்தி.

காலையில் ஏழு மணிக்கெல்லாம் 12 கிலோமீட்டர் சைக்கிள் மிதித்து, உற்சாகத்தோடு அண்ணா ஸ்டேடியத்திற்குப் பறக்கும் மாணவிகளைப் பார்க்கும்போது, சுந்தரமூர்த்தி சொன்ன அந்த நாட்கள் வெகு தொலைவில் இல்லை என்றே தோன்றுகிறது.

படங்கள் : சினிலோக் ■



**கே. ராமலட்சுமி (தடகளம்)**

"100 மீ. ஓட்டப் பந்தயம் மற்றும் உயரம் தாண்டுதலில் மண்டல அளவில் முதலிடம் பிடித்துள்ளேன். 800 மீ. ஓட்டத்தில் மிகக் குறைந்த நேரத்தில் (1 நிமிடம் 59 விநாடி) தூரத்தைக் கடந்தவர் ஷைனி வில்சன். அதைப் போல யாருமே தொடாத சாதனையை செய்வேன்"



**எம். மஞ்சு (உயரம் தாண்டுதல்)**

"என் உயரத்தையும் உயரம் தாண்டுவதையும் நிறைய பேர் பாராட்டுவார்கள். ஒவ்வொருமுறை வெளியூர்களில் போட்டியில் கலந்து கொள்ளும்போதும் புதிதாக பல விஷயங்களை கற்றுக் கொள்கிறேன். ஒலிம்பிக்தான் என் லட்சியம்"



